REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 4உ வெள்ளி (21—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 5உ சனி (22—10—55) [இதழ் 170

இளவரசி மார்கரெட் கவர்னராவார்?

வாஷிங்டன், அக் 20—

இளவரசி மார்கரெட், தனது காதலரான பீட்டர் டௌன்செண்டைத் திருமணம் செய்துகொண்டால், கரீபியன் தீவுகளுக்குக் கவர்னராக்கப்படலாம் என்று, பால்மோர் அரச மாளிகை வட்டாரங்களிலிருந்து தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக, 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற இதழின் நிருபர் ஒருவர் தெரிவித்திருக்கிறாராம்.

'விடுதலைப் போரில்' 13,000 பேர் பலி

60,000 பேர் சிறையில்!

கென்யாவில் வெள்ளையர் மனித வேட்டை

விடுதலை கோரும் மாவ் மாவ் இயக்கத்தவரை ஒடுக்கும் நெருக்கடிச் சட்டம்

நைரோபி, அக். 20—

கென்யா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் மனித வேட்டைக் காடாகக் காட்சி தருகிறது.

'கென்யாவிலிருந்து வெள்ளையரே வெளியேறுக' என்ற விடுதலை முழக்கம், நாளுக்கு நாள் வலுத்து வருகிறது

கென்யா விடுதலைக்காக, 'நீக்ரோவ தேசிய இயக்கம்' என்று ஒன்றுள்ளது.

மாவ் மாவ் என்ற இயக்கத்தினர், வெள்ளை ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து கென்யா விடுதலை பெற வேண்டுமென்பதற்காகத் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விடுதலை இயக்கத்தை ஒழித்துக்கட்டிவிடுவதற்கு' கடந்த மூன்றுண்டுகளாக நெருக்கடி நிலை பிரகடனம் செய்து, வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள், 'மாவ் மாவ்' இயக்கத்தினருக்கு 'பயங்கரவாதிகள்' என்ற பெயரைச் சூட்டி, அவர்களை ஈவு இரக்கமின்றி வேட்டையாடுவதில் முனைந்திருக்கின்றனர்.

இந்த மூன்றுண்டுக் காலத்தில் மட்டும் 60,000 பேர் சிறைப் பிடிக்கப்பட்டிருக்கின்றனர்.

13,000 பேர் இந்த விடுதலைப் போரில் உயிர்த் தியாகம் செய்திருக்கின்றனர்; இவர்களில் 10,800 பேர், வெள்ளையரால் கொன்று குவிக்கப்பட்டவர்கள்—விடுதலை கேட்டதற்காக வேட்டையாடப்பட்டவர்கள்; பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 561 பேர்களும், குடிமக்களில் 1,660 பேர்களும் இந்த விடுதலைப் போரில் உயிரிழந்திருக்கின்றனர்.

இந்தத் தகவல்கள் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டிருக்கின்றதாம்.

மூன்றுண்டு காலமாக அமுலில் இருந்துவரும் நெருக்கடி நிலை நாளை முதல் நான்காவது ஆண்டாக அமுல் செய்யப்படவிருக்கிறதாம்.

இன்னும் பல்லாயிரம் 'பயங்கரவாதிகள்' கண்டுபிடிக்கப்பட வேண்டியவர்களாயிருக்கின்றனராம்.

வீழ்ந்துபட்ட 10,800 மாவ் மாவ் வீரர்களில் 960 பேர் தூக்கிலிடப்பட்டவர்களாம்; இதரர் சுட்டுக்கொல்லப்பட்டவர்களாம்!

தூக்கிலிடப்பட்டவர்கள் எல்லாம், ஆயுதங்கள் வைத்திருந்ததாக—கொலை புரிந்ததாக—இதரர் 'மாவ்மாவ்' இயக்க சபதம் மேற்கொள்ளச் செய்ததாக, மற்றும் பலவாறாகக் குற்றம்சாட்டப்பட்டவர்களாம்!

இப்போது சிறையில் வாடிக்கொண்டிருக்கும் 60,000 பேர்கள் நீங்கலாக, ஏற்கனவே கடந்த திங்கள் இறுதிவரை, சுமார் 10,000 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனராம்.

மாவ்மாவ் இயக்கத்தின் தலைவரான ஜோமோ கென்யாட்டா பல குற்றங்கள் புரிந்ததாகக் கூறப்பட்டு, நீண்டகால சிறைத் தண்டனை தரப்பட்டிருப்பது நினைவிலிருக்கலாம்.

நெருக்கடி நிலை பிரகடனம் செய்து இவ்வாறு மனித வேட்டையாடியதின் விளைவாக, 'பயங்கரவாதிகள்,' தங்களது தீவிர நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டிருக்கின்றனர் என்று கூறி வெள்ளை அதிகாரிகள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனராம்! என்றாலும், அவர்கள், வேறு பல நடவடிக்கைகள் மூலம், 'மாவ் மாவ்' இயக்கத்தவர், தங்கள் விடுதலை இலட்சியத்தை ஈடேற்றிக்கொள்ள முற்படக்கூடும் என்றும் தாங்கள் அஞ்சுவதாயும் தெரிவித்திருக்கின்றனராம்.

'மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் எண்ணம் எந்த அடிப்படையில் தோன்றிற்று?'

'பொருளாதார அடிப்படை ஒரு நாட்டின் எல்லைக்கே தேவை'

'மாநில எல்லைக்கு அது தேவைதானு?'

சென்னைப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் கேள்வி

"மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் ஏன் வந்தது—எப்படி வந்தது?

வெள்ளைக்காரன் இந்தியத் துணைக் கண்டத்தில் ஆட்சி புரிந்த காலத்தில் 11 மாகாணங்களையும், 582-க்கும் மேற்பட்ட சுதேச சமஸ்தானங்களையும் வைத்திருந்தான். அந்த அமைப்பை அவர்கள் உருவாக்கியது, அந்தந்தப் பகுதி மக்களின் சம்மதத்தை அறிந்து விருப்பத்தை உணர்ந்து அல்ல.

ஆற்காட்டு நவாபை வென்றார்கள்; சென்னை மாகாணம் இதுதான் என்று கூறினர்கள்; திருவாங்கூர் மன்னரை நோக்கி, 'அடிபணிகிறுயா--அல்லது, உன் நாட்டையும் என் சாம்ராஜ்யத்தில் இணைத்துவிடவா?'—என்று கேட்டனர்; 'அடிபணிகிறேன்—ஆனல், என் முடியைப் பறிக்காதே—சிம்மாசனத்தை இழுக்காதே—உன் சொல்படி நடக்கிறேன்—எனக்கு மன்னன் என்ற 'மதிப்பை' மட்டும் தா'—என்றார் மன்னர்; இப்படியே கொச்சி; இப்படியே இன்னும் பலப்பல, 'சுதேச மன்னர்'கள் ஆட்சி செலுத்தும் சமஸ்தானங்கள் 582-க்கு மேற்பட்டவற்றையும், தான் போரிட்டு வென்ற பகுதிகளை 11 மாகாணங்களாக்கி அவற்றையும் தன் ஆட்சிக்குள் வெள்ளையர் வைத்திருந்தனர்.

அந்த வெள்ளையரின் ஆட்சிக்கு எதிராக விடுதலைக் குரல் எழுப்பிய காங்கிரசார், முப்பதாண்டுக் காலத்திற்கு முன்பிருந்தே, 'வெள்ளையர், எந்த ஒரு அடிப்படையுமின்றி, மாநிலங்களையெல்லாம் கண்ட கண்டபடி அமைத்திருக்கின்றனர்—இது தகாது—எனவே, இந்த மாகாணங்களை மொழி அடிப்படையில் திருத்தி அமைக்கவேண்டும்,' என்று கூறி வந்தனர்.

மாநிலங்களைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற எண்ணமே முதலில் மொழி அடிப்படையில்தான் தோன்றிற்றே அல்லாது, இப்போது கூறப்படுகின்ற பொருளாதாரம் போன்ற அடிப்படையினுல் அல்ல.

மொழி அடிப்படையில் மாநில எல்லைகள் அமைய வேண்டும் என்று விரும்பி, அதுபற்றி தீவிரமாகப் பேசிவந்த காங்கிசார், இன்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கின்றனர்.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்ததுமே அவர்கள், ஏற்கனவே இருந்த 11 மாகாணங்களுக்குப் பதிலாக, இருந்த 582 சுதேச சமஸ்தானங்களையும் ஒன்றாக இணைத்து 27 மாகாணங்களாக்கி வைத்தனர்; பின்னர் அவற்றைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று நாட்டில் எழுந்த எண்ணத்தை ஒட்டி குழு அமைத்தனர்.

காங்கிரசார், தாங்கள் கூறிவந்த கொள்கைக்கு முரணாக, இன்று, 'மொழி அடிப்படையில் மட்டும் மாநிலங்கள் அமைவது கூடாது— பொருளாதார நிலை போன்றவையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்' என்று கூறுகின்றனர்.

மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற எண்ணமே மொழி அடிப்படையில் எழுந்ததாயிருக்கும் போது, காங்கிரசார் இன்று கூறுகிற காரணங்கள் எப்படி நியாயமானவையாயிருக்க முடியும்?

ஒரு நாட்டின் எல்லையை நிர்ணயிக்கும்போது, பொருளாதார நிலை போன்ற அடிப்படைகளைக் கவனிக்க வேண்டுவது அவசியம்; ஏனெனில், அந்த எல்லைக்குள் வாழும் மக்கள், அங்கு கிடைக்கும் வளத்தையும், செல்வத்தையும் கொண்டு மட்டுமே வாழ முடியுமா என்பதை எல்லாம கணக்கிட வேண்டியவர்களாயிருப்பர். பல சின்னஞ் சிறு நாடுகள்கூட, இந்தப் பொருளாதார நிலையைக் கவனிக்காது தனித்து வாழுகின்றபோது, ஒரு எல்லைக்குள் அமையும் மாநிலங்கள் பொருளாதார அடிப்படையில் அமைய வேண்டும் என்பதற்கு என்ன அவசியம்?

தி. மு. கழகம், 'மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.

பழங்காலத்தின் சின்னமாம்!

கோவா பகுதிகளைக் கைவிட இயலாதாம்!

லிஸ்பன், அக். 20—

"இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசியப் பிரதேசங்களால் எங்களுக்குக் கிடைக்கும் பலனைவிட, அவைகள் பழங்காலத்தின் சின்னங்கள் என்பதுதான் முக்கியமானது; எங்களுடைய கிறித்துவ நாகரீகப் பணியைத் தொடர்ந்து நடத்துவதற்குப் போர்ச்சுகீசியருக்கு உரிமை உண்டு; எனவே, அப்பகுதிகளைக் கைவிடுவதற்குப் போர்ச்சுகீசிய சர்க்காருக்கு உத்தேசமேதும் கிடையாது," என்று, போர்ச்சுகீசிய வெளிநாட்டு இலாகா அமைச்சர் கூறியுள்ளார்.

இஸ்ரேல் தாக்குமா?

எகிப்து—சிரியா இராணுவ ஒப்பந்தம்

டமாஸ்கஸ், அக். 21—

எகிப்தும்—சிரியாவும் ஒரு இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இஸ்ரேல் நாடு தங்களைத் தாக்கினுல், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவும், இரு நாடுகளின் ஐக்கிய இராணுவத் தலைமை ஏற்படுத்திக்கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வழிகோலுகிறது.

பண்டிதர் சுற்றுப்பயண எதிரொலி

5 கழகத் தோழர்கள்மீது வழக்கு

கழகக் கொடியை அகற்ற மறுத்ததே காரணமாம்!

பூவிருந்தமல்லி, அக். 21—

'கோடிக்காக இந்தியாவே அழிந்துபட்டாலும் கவலைப்படமாட்டேன்; கோடியை அவமதிக்க எவரும் சுட்டு விரல் ஆட்டவும் அனுமதிக்கமாட்டேன்,' என்று பேசுகிற பண்டித நேரு, அண்மையில தமிழ் நாடு சுற்றுப்பயணத்தை மேற்கோண்டபோது, இங்குள்ள காங்கிரஸ் நிர்வாகத்தினர், பிறரது கோடிக்கு எத்தனை மதிப்புத் தருகின்றனர் என்பதைக் கண்ணுறும்போது வருந்தவேண்டியதாயுள்ளது.

கொடி காக்கக் குரல் கொடுத்துவிட்டு, வேலூரிலிருந்து காஞ்சிபுரம் சென்று, அங்கிருந்து பூவிருந்தமல்லி, வழியாகப் பண்டித நேரு சென்னைக்குத் திரும்பினுரல்லவா? அப்போது, பூவிருந்தமல்லியில், கழகத் தோழர் ஒருவர், தனது தையல் தொழிலகம் முன்பு பல ஆண்டுகளாகப் பறக்கவிட்டிருக்கும் தி. மு. கழகக் கொடியினை அகற்றிவிட வேண்டும் என்று உள்ளூர் காங்கிரசார் கோரினராம்.

தோழர் மறுத்துவிட்டதும், காங்கிரசார், போலீசாரின் உதவியை நாடியிருக்கின்றனர்; போலீஸ் அதிகாரி ஒருவர், கழகத் தோழரின் கடைக்குள் புகுந்து அவரையும் அங்கிருந்த சிலரையும் தாக்கிக் கொடுமை புரிந்திருக்கிறார்.

'பண்டித நேரு வரும்போது, வழியில் கழகக் கொடி பறக்கக் கூடாது' என்று அந்த அதிகாரி தெரிவித்தாராம்.

தோழர்களோ, 'கொடி, நேருவின் வருகைக்காகப்பறக்கவிடப்பட்டதல்ல — வழக்கமாகப் பல்லாண்டுகளாகப் பறந்து கொண்டிருப்பது — அதனை அகற்ற முடியாது' என்று தெரிவிக்

(4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21—10—'55 வெள்ளி

மயங்கிவிடக் கூடாது!

கைத்தறி நெசவாளரின் வாழ்வுக்கு நிரந்தரமான பாதுகாப்பு செய்யப்படவேண்டிய அவசியம்—'சரக்குகளுக்கு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது; உற்பத்தியைவிட, தேவை சில நேரங்களில் மிஞ்சுகிறது; சர்க்கார் 'செஸ்' நிதியிலிருந்து கைத்தறித் துணிகளுக்கு மானியம் வழங்கி வருகின்றனர்,'—என்று அவ்வப்போது கிடைக்கும் செய்திகளினால் குறைந்துவிட்டதாகக் கூறுவதற்கில்லை.

கைத்தறித் தொழிலுக்கு நிரந்தரமானதொரு பாதுகாப்புத் தேவை என்பதை, இப்போதைய நிலையில் எவரும் மறுக்கத் துணியமாட்டார்கள். அந்தப் பாதுகாப்பு, அவ்வப்போது துணிகளுக்கு ஏற்படும் கிராக்கிகளினாலோ, குறிப்பிட்ட விழாக் காலங்களில் விற்பனை அதிகரிப்பதாலோ, சர்க்கார் 'செஸ்' நிதியிலிருந்து பண உதவி செய்வதாலோ கிடைத்துவிடக்கூடியதன்று; ஏனெனில், இந்த நிலைகள் எல்லாம்,நீடித்து நின்று, கைத்தறியாளருக்கு வாழ்வு தரக்கூடியன அல்ல.

நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருவதைப் போன்று, குறிப்பிட்ட சில ரகத் துணிகள், 40 அங்குல அகலத்திற்கு மேற்பட்டவை — கரையிட்ட வேட்டி, சேலை போன்றவை—கைத்தறியினால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று பிரத்தியேக ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி, கைத்தறி, பிரம்மாண்டமான ஆலைகளுடன் போட்டியிட்டு, வெற்றிபெற முடியாது.

வெளிநாடுகளில் இந்திய ஆலைத் துணிகளுக்கு இருந்த கிராக்கி குறைந்து வருகின்றது. குறிப்பாக, பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள ஆலை அரசர்கள், இந்திய ஆலைத் துணிகள் பெரும் அளவில் தங்கள் நாட்டில் இறக்குமதி ஆவதால் தங்கள் தொழில் வளம் குன்றக் கூடுமென அஞ்சி, அப்படி துணி இறக்குமதியாவதை எதிர்த்த வண்ணமிருக்கின்றனர்.

இந்திய ஆலைத் துணிகளின் உற்பத்தி அதிகமாகிக் கொண்டே இருக்கும் அளவுக்கு ஏற்றுமதி அதிகரித்துவிடவில்லை. அந்த நிலையில் உற்பத்தியாகும் அபரிமிதமான துணிகளை, இந்தியாவிலேயேதான் விற்பனை செய்தாக வேண்டிய கட்டாயம், மறைமுகமாக ஏற்படுகிறது. ஏற்றுமதியை, விரும்பும் அளவுக்கு அதிகரித்துக்கொள்ள முடியாத போது, உற்பத்தி செய்த துணிகளை, இலாபத்தைச் சிறிதளவு குறைத்துக் கொண்டேனும், விலை போகச் செய்யத் தயங்கமாட்டார்கள், இந்திய ஆலை அரசர்கள்! இப்படி ஒரு நிலை ஏற்படும்போது, சந்தையில் புதுப்புது 'மோஸ்தரி'ல் குவியும் ஆலைத் துணிகளுடன் கைத்தறித் துணிகள் போட்டியிடுவதென்பது சிரம சாததியமானதாகும். கைத்தறித் துணியிடம் மக்களிடத்தில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிற ஆர்வத்தை மட்டும் நம்பிக்கொண்டு, சந்தையில் மலிவான விலையில் குவியும் ஆலைத் துணிகளுடன் கைத்தறித் துணியைப்போட்டியிடவிடுவது அறிவுடைமை யாகாது.

இப்போது, 'ஆலைத் துணிகளை விற்பனை செய்வதற்கு சர்க்காரிடம் அனுமதி பெறத் தேவை இல்லை' என்று வேறு, சென்னை சர்க்கார், இருந்த கட்டுப்பாட்டினை நீக்கியிருக்கின்றனர். இதனால் உருவாகக் கூடிய நிலை கைத்தறிக்குப் பாதகமானதாக இருக்கும் என்றில்லாவிட்டாலும், சாதகமானதாக இருக்க முடியாது.

இதற்கிடையில், கைத்தறி நிலை பற்றி ஆராய இந்தியப் பேரரசு நியமித்த கனுங்கோ குழுச் சிபாரிசுகளைப் புகலிடமாகக் கொண்டு, சர்க்கார், புதிய விசைத்தறிகள் துவங்குவதற்கு அனுமதி தருவதினால் ஆங்காங்கே கைத்தறி நெசவாளர்கள் கொதிப்படைந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இவற்றையெல்லாம் ஒருசேர நோக்கும்போது, கைத்தறிக்கு, சர்க்கார் இப்போது ஓரளவு தற்காலிகமான பண உதவி செய்து வருவது மட்டும், தொழிலுக்குத் தரக்கூடிய நிரந்தரமான பாதுகாப்பாக இருக்க முடியாது; அல்லது, 'நிரந்தரமான பாதுகாப்பு' என்று—மக்களில் ஒரு பகுதியினர் விழாக் காலங்களில் மிகுதியாகவும், சாதாரணக் காலங்களில் தங்கள் சக்திக்கு ஏற்பவும் தந்து வரும் ஆதரவை கொள்ள முடியாது; எனவே, சர்க்கார், கைத்தறியாளரின் துயர் துடைக்க, கைத்தறித் தொழிலுக்கு நிரந்தரமான பாதுகாப்பளிக்க முன்வர வேண்டுமென்று கோருவதுடன், அதற்காக ஏற்கனவே எழுப்பப்பட்டிருக்கிற கோரிக்கையை நினைவூட்டுகிறோம்.

அமெரிக்காவில் எகக் கிராக்கி—உற்பத்தியை மிஞ்சுகிறது, தேவை—என்ற செய்திகளில், தொடர்புடையோர் மயங்கிவிடக்கூடாது.

புற்று நோய்க்கு மக்கள் பலி!

எண்ணிக்கை அதிகரிப்பு

சுவாசப் பையில் ஏற்படும் புற்று நோய், இப்பொழுது பெருவாரியாக ஏற்பட்டு வருகிறதென்றும், 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும், இப்பொழுது ஐந்து பங்கு அதிகமான மக்கள் இதற்குப் பலியாகின்றனர் என்றும், அமெரிக்காவைச் சேர்ந்த புற்று நோய் நிபுணர் கூறியுள்ளார்.

'அதிக அளவில் புகை பிடிப்பதும், சிறு வயதிலேயே புகை பிடிக்க ஆரம்பிப்பதும், இதற்கு முக்கிய காரணங்களாகும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில், கனி இரும்பு உற்பத்தி 1953-ல் 37.8 லட்சம் டன்னாக இருந்தது; 1954-ல் ஒரு உச்ச அளவை (42.4 லட்சம் டனை) எட்டியது.

இலங்கையில் ஆட்சிமொழியாகத் தமிழ்

மக்கள் சபையில் விவாதம்

கொழும்பு, அக். 19—

"தமிழர்களின் தொடர்ந்த ஒத்துழைப்புடன்தான் நாங்கள் இந்த நாட்டில் ஒற்றுமையான—உறுதியான—முன்னேற்றமான ஒரு சமூகத்தைச் சமைக்க விரும்புகிறோம்; எனவே, அந்தத் தமிழர்களுக்கு, 'சர்க்காரை அமைத்துள்ள கட்சிக்குத் தலைவன்' என்ற முறையில் நான் சொல்ல விரும்புவதெல்லாம், கடந்த பிப்ரவரியிலிருந்தே எனது கட்சி, சிங்களமும்—தமிழும் நாடு முழுதும் அலுவல் மொழியாக இருக்கும்; தொடர்ந்து அவ்வாறே இருந்துவரச் செய்வோம் என்று கூறிவந்திருக்கிறது; இப்போது அதையே நான் திரும்பக்கூற விரும்புகிறேன்.

"சிங்களவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, தமிழர்களிடம் நியாயமாக நடந்துகொள்வதினால் நாம் இழந்துவிடுவது எதுவுமில்லை; நாம் எப்படி நமது கலாச்சாரத்தையும், மொழியையும் பாதுகாத்துக் கொள்வதில் தீவிரமாயிருக்கிறோமோ, அவ்வாறே தமிழர்களும் தீவிரமாயிருக்கின்றனர்.

"தினசரி வாழ்க்கைக்காக ஒவ்வொருவரும் சிங்களமும், தமிழும் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதல்ல, சர்க்காரின் கொள்கை,"

—என்று, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை இலங்கை மக்கள் சபையில் மொழிச் சிக்கல் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தனது அறிக்கையில் மேலும் அவர், இந்த மொழிச் சிக்கல் குறித்து சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்துவந்திருக்கின்றனர் என்பதை விளக்கியுள்ளார்.

தோழர் பெரிரா தனது தீர்மானத்தின் மீது பேசுகையில், தமிழ் மொழிக்கு சமநிலை தருவதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தியிருக்கிறார்.

தமிழ் மொழிக்கும், சிங்கள மொழியைப் போல அரசியல் சட்டரீதியான சமநிலை தரவேண்டும் என்று, என். எம். பெரிரா கொண்டுவந்துள்ள தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது; இன்று விவாதம் முடியவில்லை;

மாநிலக் குழுவினரைப் பாராட்டுகின்றனராம்!

ம. சோ. கட்சியினர் தீர்மானம்

மைசூர், அக். 18—

'பல மாநிலங்களில மக்களின் நியாயமான ஆசைகளைப் பூர்த்தி செய்திருப்பதினால் மாநிலக் குழுவினரின் சிபாரிசுகளைப் பொதுவாக வரவேற்கிறோம்' என்று ம. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இரண்டு நாட்கள் கூடி விவாதித்த பின்னர், இந்த முடிவை அவர்கள் மேற்கொண்டனராம்.

'மொழி வழியில் மாநிலங்களைத் திருத்தி அமைக்கும்போது, இந்தியாவின் ஒற்றுமையை மனதில் கொண்டு அதனைக் காப்பாற்றுவதற்கான வகையில் சிபாரிசுகளைச் செய்திருப்பது பாராட்டுதலுக்குரியது என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

பஞ்சாப் சர்க்காரில் இலஞ்ச, பாரபட்ச ஊழல்கள்

மேல்சபையில் குற்றச்சாட்டு

சந்திகார், அக். 18—

பஞ்சாப் சர்க்கார் நிர்வாகம், மிகவும் ஊழல் நிரம்பியதாக இருப்பதாக மேல் சபையில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரும், எதிர்க் கட்சியினரும், இலஞ்சம், பாரபட்சம் போன்ற ஊழல்கள்; சர்க்காரில் பெருமளவு தலைவிரித்தாடுவதாக எடுத்துரைத்துள்ளனர்.

கால்வாய்கள் அமைப்பதில் ஈடுபட்டுள்ள எஞ்சினீயர்கள் சர்க்கார் பணத்தை மோசடி செய்திருப்பதாகவும், கால்வாய் கட்டுவதில் தேவையான அளவு சிமெண்டு உபயோகிப்பது இல்லை என்றும், அதனால், சரிவர கால்வாய்கள் கட்டப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டி அகாலி உறுப்பினரான சர்தார் சிங் குற்றம் சாட்டியிருக்கிறார். இதன் விளைவாகத்தான் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் ஏராளமான உயிர்ச் சேதம் ஏற்பட்டது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும், வெள்ளச் சேதங்களுக்குப் பரிகாரம் தேடும் வேலையை, காங்கிரஸ், தான் மேற்கொள்ளுவதாகக் கூறி, அரசியல் இலாப வேட்டையாட முற்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு காங்கிரஸ் உறுப்பினர் பேசுகையில், புதியதாக நிர்மாணிக்கப்பட்ட சச்சார் 'சைபனு'க்கு அடிக்கடி பழுதுவேலை செய்ய என்று கூறி ஏராளமான பணம் வீணாக்கப்படுவது ஏன் என்று சர்க்கார் விளக்கவேண்டும் என்று கோரினார்.

மேலும், பக்ரா—நங்கல் திட்டத்தில் பணம் மோசடி நடந்திருப்பது குறித்து ஒரு விசாரணை நடத்த வேண்டும் என்றும் அந்த உறுப்பினர் கேட்டார்.

விவாதத்திற்குப் பதிலளித்த மின்சார, நீர்ப்பாசன இலாகா மந்திரி லெஹ்ரி சிங், 'எவர் இலஞ்சம் வாங்கும் பழக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனரோ அவர்களை எல்லாம் தண்டிக்க சர்க்கார் முடிவு செய்திருக்கிறது; பொதுப்படையாகக் குற்றஞ் சுமத்துவது அர்த்தமற்றது; குறிப்பிட்ட சம்பவங்களைச் சொன்னால், சம்பந்தப்பட்டவர்களை உங்கள்முன் நிறுத்தி காரண விளக்கம் தரச்சொல்லுகிறேன்,' என்று பதிலளித்திருக்கிறார்.

தென்னாற்காடு மாவட்டத்திலா உர உற்பத்தித் தொழிற்சாலை?

நிர்மாணிப்பதற்கு யோசனை கூறப்பட்டுள்ளதாம்!

வடநாட்டில் மேலும் இரண்டு அமைவது முடிவுதானும்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலை போன்று ரூ. 50 கோடி செலவில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் 3 உர உற்பத்தித் தொழிற்சாலைகளில் ஒன்று, பம்பாய்க்கு 10 மைல் தூரத்திலுள்ள 'டிராம்பே'யில் அமைக்கப்படக்கூடும்; தற்போதைய மதிப்பீடுகளின்படி 'டிராம்பே' உரத் தொழிற்சாலை ரூ. 10 கோடி செலவில் நிர்மாணிக்கப்படக்கூடும்.

"பஞ்சாப் பக்ரா-நங்கல் திட்டப்பகுதியில், ரூ. 20 கோடி செலவில் உர உற்பத்தித் தொழிற்சாலை நிர்மாணிக்கும் உத்தேசம் இறுதி வடிவமடைந்து வருகிறது; சென்னை மாநிலத்தில்—தென்னாற்காடு மாவட்டத்தில். ரூ 20 கோடி செலவில் 3-வது உர உற்பத்தித் தொழிற்சாலை நிர்மாணிப்பதற்கு யோசனை கூறப்பட்டுள்ளது," என்று மத்திய உற்பத்தி இலாகா உதவி மந்திரி கூறியுள்ளார்.

அமுல் விரிவாகிறது!

சென்னை, அக். 18—

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில், திரு-கொச்சி மாநிலத்திலும்,தொழிலாளர்களுக்கு அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அமுல் செய்யப்படும் இந்தத் திட்டத்தின் மூலமாக அந்த மாநிலத்தில் பொறுக்கி எடுக்கப்பட்ட ஐந்து பிரதேசங்களைச் சேர்ந்த 31,000 தொழிலாளர்கள் நன்மையடைவார்கள்.

கொல்லம், எர்ணாகுளம், ஆலப்புழை, ஆல்வாய், திருச்சூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 180 தொழிற்சாலைகள் இந்தத் திட்டத்தின் கீழ் வரும்.

தென்னாட்டில் இந்தத் திட்டத்தில் மூலமாக மொத்தம் 77,000 தொழிலாளர்கள் நன்மை பெறுவர்.

கோழி வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும்

இந்தியா முழுவதும் கோழிகள் வளர்க்கும் பண்ணைகளை அண்மையில் இந்திய அரசாங்கம் ஏற்படுத்தப் போகிறதாம்.

கோழிகளின் வளர்ச்சிக்காக இந்நாடு முழுவதிலும் சுமார் 300 - வளர்ச்சிப் பகுதிகள் நிறுவப்படும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குஞ்சுகளோ, அல்லது, இந்தியாவிலேயே நல்ல ரகங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட குஞ்சுகளோ, வெகு சிரத்தையுடன் தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி பல பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

நினைவுபடுத்துகின்றனர்!

புது டில்லி, அக். 18—

தசராவும், தீபாவளியும் நெருங்கிக்கொண்டிருப்பதால், சில ரக பட்டாசுகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பது பற்றி இந்திய சர்க்கார் பொதுமக்களுக்கு மீண்டும் நினைவுபடுத்தியுள்ளனர்.

ஒன்றரை அவுன்ஸ் எடைக்கு அதிகமாகவுள்ள 'அணுகுண்டுகள்' படபடா வெடிகள் மற்றும் இந்த ரகங்களைச் சேர்ந்த பட்டாசுகளை உற்பத்தி செய்வதும், வைத்திருப்பதும், விற்பனை செய்வதும் சட்ட விரோதம் என்று இந்திய சர்க்கார் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

அழைத்தால் அமெரிக்கா செல்வாராம்!

சீனக் குடியரசின் தலைவர் மா-சே-துங், அமெரிக்க சர்க்கார் அழைக்குமானால், அந்நாட்டிற்குச் செல்வதற்குத் தான் தயாராயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறாராம்.

பெண்கள் நடத்தும் தேசிய சேமிப்பு இயக்கத்தின் மூலம், இரண்டு ஆண்டு காலத்தில், சுமார் ரூ. 2 கோடி வசூலாகியிருக்கிறது,

அண்ணாதுரை சுற்றுப்பயணம்

★

பாபநாசம்

16—10—55 மாலை 6-30 மணிக்கு, தஞ்சை மாவட்டம் பாபநாசம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக்கூட்டம் தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் அ. பொன்னம்பலனார் தி. மு. கழகக் கொடியை உயர்த்தினார். தோழர்கள் ஏ. பி. தருமலிங்கம், கே. கே. நீலமேகம், கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் குறித்தும், வடவரை வாழ வைக்கவும், தென்னாட்டைத் தேய வைக்கவும் வழி செய்யும் ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் விளக்கிப் பேசியபின், அண்ணா அவர்கள் காங்கிரஸ் ஆட்சியால் மக்கள் துயரம் தீரவில்லை என்றும், வடவர் ஆதிக்கம் நீங்கி, திராவிட நாடு பெறவேண்டிய அவசியம் பற்றியும் சொற்பொழிவாற்றினார். அண்ணா அவர்கட்கு, பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டதுடன் வரவேற்பு இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

குளித்தலை

17—10—55 மாலை 6 மணிக்கு குளித்தலை தி. மு. கழக 7-வது ஆண்டு விழா, கடம்பர்கோவில் திரு. வி. க. திடலில், தோழர் தி. வீ. முத்துகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ். மணி, அம்பில் தர்மலிங்கம், அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசியபின், குளித்தலை ஊராட்சி மன்றத்தின் சார்பில் திரு. கே. ஆர். வையாபுரி அவர்களால் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. குளித்தலை வட்டார தி. மு. கழகக் கிளைகளின் சார்பிலும், விவசாயச் சங்கங்களின் சார்பிலும் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அண்ணா அவர்களுக்கு அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தின்போது, தோழர் தி. வி. முத்துகிருஷ்ணன், குளித்தலை தி. மு. கழகச் சார்பில் ரூ. 101 மாநில மாநாட்டு நிதியாக அண்ணா அவர்களிடம் கொடுத்தார். அண்ணா அவர்கள் நன்றி தெரிவித்து அரியதோர் உரையாற்றினார்.

கரூர்

18—10—55 காலை 9 மணிக்கு, கரூர் புகைவண்டி நிலையத்திற்கு முன்புறம் உள்ள வீதியில், அண்ணா அவர்கள் கழகக் கொடி ஏற்றி வைத்து சிறிது நேரம் பேசினார்.

நன்னியூர்

18—10—55 காலை 11 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், தோழர் பெரியசாமி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. பி. மூர்த்தி, கிட்டு, தி. வீ. முத்துகிருஷ்ணன், ஜி. பராங்குசம், அம்பில் தர்மலிங்கம், கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார், சோமு ஆகியோர் பேசியபின், அண்ணா அவர்களுக்கு நன்னியூர் ஊராட்சி மன்றத்தின் சார்பாக மன்றத் தலைவர் கருப்பண்ணன் அவர்களால் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டது. அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ 100 தரப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

அக். 23 காலை: மதுரை-சிறப்புக் கூட்டம்;
மாலை 6 மணிக்கு: முத்து படிப்பக ஆண்டு விழா பொதுக்கூட்டம்;
இரவு 10 மணிக்கு: 'நீரும் நெருப்பும்'—நாடகத் தலைமை.

24 மாலை 5 மணிக்கு: உசிலம்பட்டி பொதுக் கூட்டம்;
இரவு 8 மணிக்கு: தேவாரம்

25 காலை: தேவாரம்-திருமணம்;
மாலை 4 மணிக்கு: வண்டிப்பெரியார் பொதுக்கூட்டம்.

சென்னை 16-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

23-10-55 காலை 10 மணிக்கு சென்னை 16-வது வட்ட தி. மு. கழக அவசரச் செயற் குழுக் கூட்டம், கழக இல்லத்தில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திருவனந்தபுரம் தி. மா. மு. கழக முதல் ஆண்டு விழா

23—10—55 மாலை 5 மணிக்கு, திருவனந்தபுரம் ஆண்டாள் நிலயத்தில், திருவனந்தபுரம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் ஆண்டு விழா, தோழர் வேணாட்டு கருணாகரன் தலைமையில் நடைபெறும். தோழர் எம். எஸ். மணி சொற்பொழிவாற்றுவார்.

பெங்களூர் முத்தமிழ் நாடக மன்றம் 5-வது ஆண்டு விழா

23—10—55 மாலை 6 மணிக்கு, பெங்களூர், மாகடி ரோடு, 7-வது கிராஸ், இரண்ணய்யா அரங்கில், தோழர் வெங்கடரமணா தலைமையில் நடைபெறும். தோழர்கள் ப. செல்வராசன், வே. இளஞ்சேரன் ஆகியோர் பேசுவர். இரவு 7 மணிக்கு, தோழர் எம் நாகராஜ் தலைமையில், மேற்படி மன்றத்தினர் நடிக்கும் 'திருமணம்'—நாடகம் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

22—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை 46-வது வட்ட தி. மு. கழகப் பணிமனை முன்பாக (எண் 142, ஆள்வார்பேட்டை தெரு, ஆள்வார்பேட்டை) தோழர் டி. டி. ராசன் தலைமையில் நடைபெறும் 'நாடு தந்த நல்லவர்கள்' எனும் தலைப்பில், தோழர்கள் இரா. அகமழகன், வில்லவன்கோதை, பிரமையன், மற்றும் பலர் பேசுவர்.

சர்க்கார் ஊழியர்களின் சம்பளக் குறைப்பு

காட்மண்டு, அக். 20—

நேபாளத்திலுள்ள எல்லா சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பளத்தில் 5 சதவிகிதம் குறைப்பும், புதிய சம்பள விகிதமும், அலவன்சுகளும் மன்னர் மகேந்திராவினால் அறிவிக்கப்பட்டது.

நேபாளத்தின் தற்போதைய பொருளாதார நிலைமையை முன்னிட்டு சர்க்கார் எல்லா ஊழியர்களின் சம்பளத்திலும் 5 சத விகிதம் குறைப்பதற்கு மன்னர் மகேந்திரா முடிவு செய்துள்ளாராம்.

மாதமொன்றுக்கு பிரதம மந்திரிக்கு ரூ. 2,400; மந்திரிகளுக்கு ரூ 1,400; உதவி மந்திரிகளுக்கு ரூ 1000 ஆக சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போருக்கு விரைவு காண்கின்றனர்!

கோவாவுக்குள் இரகசியமாக வேலை செய்துவரும் போராட்ட வீரர்கள், சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்குத் திட்டங்கள் வகுத்திருப்பதாகச் செய்தி ஒன்று கூறுகிறது. தாய்நாட்டின் விடுதலைக்காக அனைத்தையும் தியாகம் செய்வதென அவர்கள் முடிவெடுத்தனராம்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை (மீர்சாகிப்பேட்டை)
இராமாராவ் தோட்டத்தில்
23—10—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. கோவிந்தசாமி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
வி. முனுசாமி எம்.சி.

★

சென்னை (செம்பியம்)
பெரம்பூர், குருசாமி கிராமணியார் தோட்டத்தில்
(வீனஸ் டாக்கீஸ் அருகில்)
23—10—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: இளம்பரிதி
பேசுவோர்:
நாஞ்சில் கி. மனோகரன்
சோர்ணம்

★

ராப்ராய்தோட்டம் (அரவேணு)
தி. மு கழகப் புதிய கட்டிடத் திறப்பு விழா
23-10-55 காலை 10 மணிக்கு
அலுவலகத் திறப்பாளர்: என். வி. நடராசன்
மாலை: பொதுக் கூட்டம்
தலைவர்: ஜெ. கருணைநாதன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
வி. சண்முகநாதன்

சேலம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

★

"சேலம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், 23—10—55 மாலை 3 மணிக்கு, சேலம்-கோயம்பத்தூர் லாட்ஜ், சாந்தி நிகேதனில் நடைபெறும். அது சமயம் பொதுக் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும்,"

சேலம் மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

★

"தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், நவம்பர் மாதம் 20, 21, 22, 23 ஆகிய தேதிகளில், சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய இசைந்துள்ளார். கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் மாவட்டக் கழகத்திற்கு எழுதுமாறு கேட்டுக்கொள்கிறேன்," என்று, சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் பி. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

ஒரிசா மக்களுக்கு உன்னத வாழ்வு?

உலகம் அறிந்த ஹிராகுட் அணையால் விளையும் நன்மைகள் பற்றி விளக்கம்

ஒரிசாவின் நிலப்பரப்பு 60,000 சதுர மைல்; மக்கள் தொகை 1,40,00,000. நிலக்கரி, இரும்பு, மாங்கனீஸ், மைக்கா முதலிய கனிப் பொருள்கள் அங்கு மிகுதியாக உள்ளன. மின்சாரம் இல்லாததால், இந்தச் செல்வத்தை வெளியே கொணர முடியவில்லை.

பயிர் செய்யக்கூடிய நிலங்களும், காடுகளும் அதிகமாக இருக்கின்றன; ஒழுங்காக மழை பெய்யாததாலும், அதனால் ஒரே நிலையில் மழைத் தண்ணீர் கிடையாததாலும், ஒரிசாவில், மழை நீரைக் கொண்டு ஆண்டிற்கு ஒரு போகம் தான் பயிர் செய்ய முடிகிறது. அதுவுமன்றி, வெள்ளத்தாலும் வறட்சியாலும் அந்த மாநிலத்திற்குக் கெடுதல்கள் நேரிடுகின்றன.

ஒரிசாவில் ஓடும் மகாநதி ஒரு அடி ஆழம்—7,40,00,000 ஏக்கர் நிலத்தில் பாய்ந்து, பயிர் செய்யப் பயன்படும் தண்ணீரைக் கடலில் கொண்டு சேர்க்கிறது. இந்த நீரில் 5 சதவிகிதம் தண்ணீருக்குக் குறைவாகவே இன்று பயன்படுகிறது; 95 சதவிகிதம் தண்ணீர், விவசாயிக்குப் பயன்படாமற்போகிறது.

இவ்வாறு, தண்ணீர், வீணாகக் கடலில் போய் விழுவதைத் தடுத்து, அதனை, மக்கள் நலத்துக்குப் பயன்படுத்துவதற்கு ஹிராகுட் அணைக்கட்டுத் திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது.

ஒரிசா மாநிலத்திலுள்ள மகாநதிக் கரையில், ஒரு காலத்தில் சிறிய ஊராயிருந்த ஹிராகுட், இன்று உலகம் அறிந்த இடமாகி விட்டது; உலகிலேயே மிகவும் நீளமான காங்கிரீட் அணைக்கட்டு அங்கு கட்டப்படுவதே அதற்குக் காரணம். அதன் மண் பகுதி 11,980 அடி நீளமானது; அதன் காங்கிரீட் பகுதி 3,768 அடி நீளமானது.

1957-ல், இந்த அணைக்கட்டு வேலை முழுவதிலும் முற்றுப் பெற்றுவிடும்; எனினும், விவசாயத்துக்கு மின்சாரமும், தண்ணீரும் அடுத்த ஆண்டு முதலே கிடைக்கத் தொடங்கும். வெள்ளத் தடுப்பும், இந்த அணைக்கட்டின் மற்றொரு நோக்கம்.

இன்று 30,000 தொழிலாளரும், 142 எஞ்சினீயர்களும் அணையைக் கட்டிமுடிக்க அல்லும் பகலும் உழைக்கிறார்கள். இந்த அணையால் ஒரிசாவிலுள்ள சாதாரண மக்கள் வாழ்வு பெறுவார்கள்; அவர்களது வாழ்க்கைத்தரம் உயரும்.

அந்தத் திட்டம் பின்வரும் அம்சங்கள் கொண்டதாகும்:—

1. ஹிராகுட்டில், மூன்று மைல் நீளமுள்ள அணைக்கட்டும், ஆற்றின் இருமருங்கும் குன்றுகளுக்கு இடையிலுள்ள இடத்தை அடைப்பதற்கு 13 மைல் நீளமுள்ள மண் கரைகளும் அமைக்கப்படும். இவ்வாறு அமைந்த ஏரியில் ஆற்று நீர் முற்றும் பெருகி விட்டால், அந்த நீர் 288 சதுர மைல் பரப்பில் நிற்கும். அது ஒரு அடி ஆழத்தில் கட்டி நின்றால், 66 கோடி ஏக்கர் நிலத்தில் நிற்கும்.

2. நீர்ப்பாசனக் கால்வாய்கள் வெட்டப்படும். ஏரியின் இரு கரைகளிலுமிருந்தும் முக்கியமான கால்வாய்கள் செல்லும். அவற்றின் நீளம் $91\frac{1}{2}$ மைல்; சிறு கால்வாய்களின் நீளம் 460 மைல்.

3. அருவியால் இயங்கும் மின் உற்பத்தி இயந்திரங்களைக் கொண்ட மின்சார நிலையங்கள் இரண்டும் 2 இலட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடியவை. இவற்றுள் ஒன்று, பெரிய அணையின் அடியில் கட்டப்பட்டுள்ளது; மற்றது, இந்த அணைக்குக் கீழ்ப்புறத்தில் 14 மைலுக்கு அப்பால் அமைக்கப்படும்.

இந்தத் திட்டத்துக்கு, அமெரிக்காவினின்றும் 32,66,988 டாலர் பெறுமான கருவிகள் வந்துள்ளன.

கழகச் செய்திகள்

★

வால்பாறையில் தி. மு. க. பொதுக் கூட்டம்

16—10—55 காலை 11 மணியளவில் வால்பாறை வட்ட தி. மு. கிளைக் கழகங்களின் சார்பில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு மாபெரும் ஊர்வல வரவேற்பு அளிக்கப்பட்டது. மாலை $1\frac{1}{2}$ மணியளவில், காந்தி மைதானத்தில் தோழர் இரா. பிச்சைமுத்து தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வேலவன், ஜே. பி. ஜபக்கனி, பிச்சைமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், தோழர் சம்பத் அவர்கள் நீண்டதோர் உரையாற்றினார். பின்னர், மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 80-12-9 கொடுக்கப்பட்டது.

சென்னை 43-வது வட்ட தி. மு. கழகம்

16—10—55 பிற்பகல், மேற்படி கிளைக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் மு. புரட்சிமணி இல்லத்தில் நடைபெற்றபோது, தோழர் ஏ. சண்முகம் அவர்களின் துணைவியாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பின்னர் கிளைக் கழகத் துணைச் செயலாளராக தோழர் மு. அரங்கநாதனும், செயற்குழு உறுப்பினராக தோழர் தா. கணேசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், 23—10—55-ம் தேதிய பொதுக் கூட்டம் பற்றிய சில முடிவுகளும், மற்றும் கிளைக் கழக சம்பந்தப்பட்ட சில முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை 41-வது வட்ட தி. மு. கழகத் துவக்கம்

18—10—55 அன்று, சேப்பாக்கம், எண் 13 அருணாசல ஆசாரி தெருவில், தோழியர் அலமேலு அப்பாதுரை இல்லத்தில், தோழர் இளம்பரிதி முன்னிலையில் தோழர் நீலநாராயணன் தலைமையில் 41-வது வட்ட தி. மு. க. கிளைக் கழகம் துவக்கப்பட்டது. தோழர்கள் புதுவை சி. ஏ. முகிலன், இராசமாணிக்கம், மு. வேதாசலம் ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகவும், தோழர்கள் இளவழகன், இராவணன் ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'வடக்கே இந்தியும், தெற்கே சிங்களமும் தாய்மொழியை அழிக்கப் பார்க்கின்றன'

இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் எச்சரிக்கை

★

"தமிழ் மொழிக்கும்—தமிழர் பண்பாட்டிற்கும், இன்று இடர்மிக்க காலம்; வடக்கே இந்தி மொழியும், தெற்கே சிங்கள மொழியும் தமிழ் மொழியை அழிக்கப் பார்க்கின்றன; இவ்விடர்களிலிருந்து, தமிழ் மொழியைப் பாதுகாத்து, உலகில் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் மொழிகளுள் ஒன்றாக ஆக்கிவைத்தல் நமது கடமையாகும்,"

என்று, யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில், இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் க. கணபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

★

"இலங்கையைப் போல் இந்தியாவிலும் ஆட்சி மொழிப் பிரச்சினை அதிகரித்து வருகிறது; ஒரு சாரார் தமிழென்றும், ஆங்கிலமென்று மற்றொரு சாராரும், இந்தி என்று இன்னொரு சாராரும்—இங்ஙனம் தத்தம் மொழியையே ஆட்சி மொழியாகக்கொள்ள விரும்புகின்றனர்; இங்கு போல்தான் அங்கும் தமிழுக்கு அபாயம் காத்துக் கொண்டிருக்கிறது; எனவே, தமிழும் ஆட்சி மொழியாக வருவதற்கு தமிழர்கள் சளைக்காது உழைக்க வேண்டும்,"

என்று, குன்றக்குடி அடிகளார் இலங்கையில் மட்டக்களப்பு நகர சபை மண்டபத்தில், வரவேற்பு உபசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

குப்புறவிழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையாம்!

சட்டசபை தோல்வி பற்றி பனம்பள்ளி கூற்று

திருவனந்தபுரம், அக். 20—

"நேற்று சட்டசபையில் சர்க்காருக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட இரு முடிவுகளும் எந்தவித முக்கியத்துவமும் பெற்றன அல்ல.

"காங்கிரஸ் நாற்காலிகள் காலியாயிருந்த நேரத்தில், அந்த முடிவு கள் மேற்கொள்ளப்பட்டன; என்றாலும், அந்த முடிவுகள் உள் ளடக்கிய கொள்கைகள் சர்க்காருக்கு உடன்பாடானவையே,"

—என்று, தி-கொ. முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன் நிருபர் களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

சென்னைக்குப் பெண் போலீஸ் நியமனம்!

கமிஷனரின் சிபாரிசுகளை சர்க்கார் ஆலோசிக்கிறதாம்!

சென்னை, அக். 20—

போலீஸ் படையில் பெண்களை யும் சேர்த்துக்கொள்வது பற்றி, சென்னை போலீஸ் கமிஷனர் செய் திருந்த சிபாரிசுகளைச் சென்னை சர்க்கார் இப்பொழுது பரிசிலனை செய்து வருகிறது. ஆச்சாரியார், ஆட்சி பீடத்திலிருந்தபோது, 'போலீஸ் வேலைக்குப் பெண்கள் தகுதியற்றவர்கள்' என்று கூறப்பட் டதால், இந்த யோசனை அப்போது கைவிடப்பட்டுவிட்டது.

சட்ட சபையில், இப்பிரச்னை பற்றி விவாதிக்கப்பட்ட பின்னர், பெண் போலீசார் நியமிக்கப்படக் கூடும்.

பிரிட்டனில் அநேக இடங் களில், பெண்கள்தான் போக்கு - வரத்துப் போலீசாராக உள்ளனர்; சென்னை சர்க்கார் அதே முறை யைப் பின்பற்ற விரும்பவில்லை.

பெண் போலீசாருக்கு 'யூனி பாரங்கள்' கொடுப்பதா, அல்லது, சேலை கட்டிக் கொள்வதற்கு அனுமதிப்பதா என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்பட வில்லை. அநேகமாக, பெண்கள் விரும்பும் மஞ்சள் அல்லது நீல நிற 'யூனிபாரங்கள்' கொடுக்கப்படக் கூடும்.

பெண் போலீசாருக்கு துப்பாக்கி சுடுவதற்குப் பயிற்சி அளிக்கப் படும்; 'ரௌடி'களை எவ்வாறு அடக்குவது என்பதுபற்றி கற்றுத் தரப்படும்.

பெண் கைதிகளைப் பாதுகாத் தல், திருடியதாகச் சந்தேகிக்கப் படும் பெண்களைத் தேடிக்கண்டு பிடித்தல், விசாரணைக்காகப் பெண் கைதிகளை சிறையிலிருந்து நீதி மன்றங்களுக்கு அழைத்துச் செல் லப்படுகையில் உடன் செல்லுதல், ஏழ்மை போன்ற காரணங்களால் வாழ்க்கை நெறியில் தவறிச் செல் லும் பெண்களை மீட்டல்—ஆகிய பணிகளில் பெண் போலீசார் ஈடு பட நேரிடக்கூடும்.

நியமிக்கப்படுவதற்குள்ள பெண் போலீஸ் பிரிவில் ஒரு சப்-இன்ஸ் பெக்டரும், 4 அல்லது 5 தலைமை கான்ஸ்டபிள்களும், சுமார் 30 கான்ஸ்டபிள்களும் இருப்பரெனத் தெரிகிறது; ஆறுமாத காலம் இவர்களுக்கு உடற் பயிற்சி அளிக் கப்படும்.

துவக்கத்தில், சென்னை நகரில் மட்டும்தான் இவர்கள் பணியாற்று வர். பின்னர், வெளியூர்களுக்குப் பரவலாக்குவது பற்றியும் கவனிக் கப்படும்.

நில அரிப்பைத் தடுப்பதற்கு நிதி உதவி

நடப்பு ஆண்டில், நில அரிப் பைத் தடுப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுவதற்கு, திரு- கொச்சி சர்க்காருக்கு இந்திய சர்க் கார், ரூ. 39,73,260 கடனாகவும், ரூ. 6,62,210 மானியமாகவும் அளித்துள்ளனர்.

சாலக்குடியிலும், பெரியாறு நதி தீரப் பிரதேசத்திலும் உள்ள 25,000 ஏக்கரா நிலத்தை மண் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பிரதேசத்தில் நெல்லும், மர வள்ளிக் கிழங்கும் பயிர் செய்யப் படும்.

பண்டிதர் சுற்றுப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவே, போலீசார், தோழர்கள் வைத்திலிங்கம், சின்னசாமி, நட ராஜன், மூர்த்தி, செல்வராஜு ஆகியவர்களைக் கைது செய்து சிறைப்படுத்தினராம்.

இந்த சம்பவத்தை ஒட்டி 5-10-55 அன்று ஊரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதையும் பொருட்படுத் தாது, போலீசார், கொடியை, கம்பத்திலிருந்து அகற்றினராம். கழகத் தோழர் வைத்திலிங் கத்தை போலீஸ் அதிகாரி ஒரு வர் காரணம் எதுவுமின்றியே கன்னத்தில் அறைந்து, தனது அதிகார வெறியைக் காட்டிக் கொண்டாராம்.

இரண்டு நாள் காவலில் வைக்கப் பட்டிருந்த தோழர்கள் ஜாமீ னில் வெளிவந்திருக்கின்றனர். அவர்கள் மீது பதிவு செய்யப் பட்ட வழக்கை வேறு நீதி மன் றத்தில் விசாரிக்கவேண்டுமென தோழர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்திருப்ப தாகத் தெரிகிறது.

'கொடி காக்க, நாடே அழிந்து படினும் கவலைப்படேன்' என்று கூறும் பண்டிதரின் 'சீடர்'கள், பிறருக்கும், தங்களைப் போலவே தங்கள் தங்கள் கொடிகளின் கௌரவத்தைக் காப்பாற்றவேண் டும் என்ற உணர்ச்சி இருக்கத் தானே செய்யும் என்பதை ஏன் உணரவில்லை என்று ஊர் மக்கள் பேசிக் கொள்கின்றனர். —(ந கி.)

பெங்களூரில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள வானொலி நிலயத் தில், நவ. 2-ந் தேதியன்று ஒலி பரப்பு ஆரம்பமாகும். கன்னட மொழி பேசும் மக்களுக்காக ஏற் படுத்தப்பட்டுள்ள இந்த வானொலி நிலயம், கன்னட நாடு முழுவதி லும் கேட்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிகிறது.

பொதுச்செயலாளர் சொற்பொழிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டும்' என்று கருதுகிறது. தென்னாட்டைப் பொறுத்தவரையில், மொழி வழி மாநிலங்கள் அமைவது, தி. மு. கழக இலட்சியமான திராவிட நாடு அமைவதற்கு முதற்படி யாக விளங்கும் என்று நாம் கருதுகிறோம். அந்த இலட்சியத் தினை மனதில் கொண்டு, தென்னாட்டைப் பொறுத்த வரையி லேனும், மாநில எல்லைகள் மொழி வழியில் வகுக்கப்பட வேண் டும் என்று வற்புறுத்துகிறது.

தென்னாட்டை மொழி வழியில் பிரிப்பது மிக சுலபமான காரியமாகும்; தகராறுக்கு இடமில்லாத வேலையாகும். மலையாளம் பேசும் பகுதிகள் கேரளமாக வும், தமிழ் வழங்கும் பகுதிகள் தமிழகமாகவும், கன்னடம் வழங்கும் பகுதிகள் கர்நாடகமாகவும், தெலுங்கு வழங்கும் பகுதிகள் ஆந்திரமாகவும் அமையவேண்டும்—அமைய முடியும்.

மாநிலக் குழுவினர், இந்தக் கோரிக்கையை பூராவாக நிறைவேற்றவில்லை. ஐதராபாத்திலுள்ள தெலிங்கானா பகுதிகள் ஆந்திரத்துடன் சேர்க்கப்படாமல் தனியாக விடப் பட்டிருக்கின்றன; திரு-கொச்சியில் உள்ள தமிழ் தாலுகாக் கள் ஒன்பதில் நான்கு மட்டுமே தமிழகத்துடன் சேர்க்கப்பட் டிருக்கின்றன; இந்தக் குறைகள் எல்லாம் நிவர்த்திக்கப்பட்டு, தென்னாடு மொழிவழி மாநிலங்களைக் கொண்டதாக ஆக்கப்பட வேண்டும். இதற்கு சென்னை சர்க்கார் தங்களாலான அத்தனை யையும் செய்வதாகக் கூறுகின்றனர்; என்ன செய்கின்றனர் என்று பொறுத்துப் பார்க்கலாம்,"

—என்று, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வடசென்னை தாளமுத்து-நடராசன் முன்னேற்ற மன்ற முதலாண்டு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், தாளமுத்து—நடராசன் தியாகம் குறித்தும், அன்று நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற் றியும் குறிப்பிட்டுவிட்டு, இன்று, வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், இந்தியைத் தென்னகத்தில் திணிக்க மேற்கொண்டுள்ள முயற் சிகளை வன்மையாகக் கண்டித்தும், இந்தி தமிழ் நாட்டிற்கு—திரா விடத்திற்கு ஏன் தேவை இல்லை என்பதை ஆதாரங்களுடனும் விளக்கினார்.

பின்னர், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் அரியதோர் கருத்துரை நிகழ்த்தினார்.

கூட்ட இறுதியில் மன்றத் தின் சார்பில் மாநில மாநாட்டிற் காக ரூ. 51—1—3 மன்றச் செய லாளரால் பொதுச்செயலாளரிடம் தரப்பட்டது.

பொதுச் செயலாளருக்கு பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர்மாலை களும் அணிவிக்கப்பட்டன. விழாக் கூட்டத்திற்குப் பெருமை செய்த பலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது. (ந-கி)

★

நிகழ்ச்சி

சென்னை மீனாட்சியம்மன் பேட்டை தாளமுத்து-நடராசன் முன்னேற்ற மன்றத்தின் முத லாண்டு விழாப் பொதுக்கூட்டம் 20—10—55 மாலை ராமநாயக் கன் தெருத் திடலில் நடைபெற் றது.

கூட்டத்திற்கு தோழியர் சத்திய வாணிமுத்து அம்மையார் தலைமை ஏற்று அரியதோர் கருத்துரை வழங்கினார்.

அடுத்துத் தோழர் முகவை ஆர் கஸ் பாண்டியன் சிறிது நேரம் பேசியதும், தோழர் எஸ். எஸ் தென்னரசு பேசினார்.

'விசால ஆந்திரம் உடனே அமைய வேண்டும்'

'1961 வரை ஒத்திப்போடக்கூடாது'

ஆந்திர மந்திரிசபை எழுச்சி

கர்னூல், அக். 20—

"இப்போதுள்ள தெலிங்கானா பகுதி சட்ட மன்ற உறுப்பினர் களோ, ஆந்திராவுடன் தெலிங்கானா இணைவதா—கூடாதா என்பதை நிர்ணயிக்குமாறு அனுமதிக்கப்பட வேண்டும்; 1961-ம் ஆண்டுத் தேர்தல் வரையில் இதனை ஒத்திப் போடக் கூடாது,"

—என்று, மாநிலக் குழு அறிக்கைபற்றி விவாதித்த பின்னர், ஆந்திர மந்திரி சபையினர் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருப்பதாகத் தெரிய வருகிறது.

"தெலிங்கானா, ஆந்திரா இவை இரண்டின் நன்மைக்காகவும், விசால ஆந்திரம் அமைய வேண் டியது இன்றியமையாதது — அவசியமானது.

"ஒரிசாவில் உள்ள பர்லாகிமிடி முதலிய தெலுங்குப் பகுதி களின் சிக்கல்கள் குறித்து, குழு வினர் எதுவுமே கூறாது விடுத் திருக்கின்றனர்; அது குறித்து உடனே இந்திய சர்க்கார் கவ னிக்க வேண்டும்,"

என்றும், ஆந்திர மந்திரி சபைத் தீர்மானம் கோருகிறதாம்.

போன் மூலம் தாராசிங்கிற்குத் தகவல் கிடைத்திருக்கிறது என் றும் தெரியவருகிறது.

பிரதமர் நேரு-தாராசிங் சந்திப்பு

அமிருதசரஸ், அக். 20—

மாநில புது அமைப்புத் திட்டத் தின் சில அம்சங்கள் குறித்து விவாதிப்பதற்காக, டில்லி வரு மாறு, பஞ்சாப் அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங்கிற்கு பண்டித நேரு அழைப்பு அனுப்பியிருப்பதாகத் தெரி கிறது.

இது குறித்த அழைப்பு, டில்லி யிலிருக்கும் மக்கள் சபை உறுப் பினரான சர்தார் உக்கம் சிங் மூலம் அனுப்பப்படுகிறது என்றும், ஆனால், அதற்கிடையில் டெலி

கழகக் கூட்டம்

★

பூவிருந்தமல்லி
சன்னதி தெருவில்
22—10—55 மாலை 6 மணிக்கு

தலைவர்:
டி. சண்முகம் எம். எல். ஏ.

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
கே. டி. எஸ். மணி
டி. கே. போரூரான்

அன்று மாலை 4 மணிக்கு, கண் டோன்மெண்ட் தி. மு. கழகக் கொடிக் கம்பத்திலிருந்து, தோழர் டி. இராசரத்தினம் தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

திருக்குறள் வகுப்பு

22—10—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்நாயக் கன்பேட்டை, எண் 15, முத்து கிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். 'இடன் அறிதல்' என்பது குறித்து திரு. மயிலை சிவமுத்து, திருமதி ஜோதீஸ்வரி ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

22-10-55 மாலை 6½ மணிக்கு, சென்னை-இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோவில் தெரு, வட சென்னை குறள் நெறிக் கழக அறையில், 'தமிழன் பண்பு' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

நகர இளைஞர் கழகம்

11-வது சுகாதார வார விழா, தோழர் கே. வி. ஸ்ரீதரன் தலைமை யில், டாக்டர் எம். சந்தோஷம் அவர்களால், 22—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை - குளை, மாணிக்கச் செட்டித் தெரு, மேற் படி கழக மனையில் துவக்கிவைக் கப்படும். டாக்டர் பி. எஸ். சம்பந்தம் சொற்பொழிவாற்றுவார்.

மந்திரியின் முன் மாணவர் ஆர்ப்பாட்டம்

'கர்நாடகம் வேண்டும்' என குரல் எழுப்பினர்

காசர்கோடு, அக். 20—

'எங்களுக்குக் கர்நாடகம் வேண் டும்' என்று குரல் எழுப்பிய வண்ணம், இவ்வூர் வழியாகப் பெங்களூர் சென்றுகொண்டிருந்த மந்திரி பக்தவத்சலத்தின் முன், மாணவர்கள் கூடி ஆர்ப்பாட் டம் செய்திருக்கின்றனர்.

மாணவர்கள் சார்பில் மகாலிங்க பட் என்பார், மந்திரியிடம் தந் துள்ள மனு ஒன்றில், மாநிலக் குழுவின் சிபாரிசுகள் தங்களுக்கு சாதகமானதாக இல்லை என்று தெரிவித்திருக்கின்றனர்.

மந்திரியுடன் சென்ற நரசப் பாப்பையா என்ற மேல் சபை உறுப்பினர், சிபாரிசுகளைக் குறித்து மாணவர்கள் கிளர்ச்சி யடையத் தேவை இல்லையென்றும் தங்கள் கருத்துக்களை அமைதியா கத் தெரிவிக்கலாம் என்றும் கூறி னராம்.

நேருவுக்கு தமிழரிடத்தில் தனிப் பிரியமாம்!

எஜமானர் குணம் குறித்து 'எடுபிடி'யின் கூற்று

மதுரை, அக். 20—

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக் கள் சென்னையுடன் இணைய வேண்டுமென நாம் கோரவிருக் கிறோம்; அதற்கான ஆயத்தங் களைச் செய்துகொண்டிருக் கிறோம்;

"நமது கோரிக்கைகளைப் பண் டித நேருவிடம் தெரிவிப்போம்; நேரு ஒருபோதும் பாரபட்ச மாக நடந்துகொள்ளமாட்டார்; தமிழர்களிடத்தில் அவருக்குத் தனிப் பிரியம் உண்டு,"

என்று, சென்னை நிதி மந்திரி சுப் பிரமணியம், திருமங்கலத்தில் பேசிய கூட்டமொன்றில் குறிப் பிட்டிருக்கிறார்.

மன்னர் பாவோடாய் விரட்டப்படுவார்?

பிரதமருக்கு இராணுவத் தலைவர்கள் உறுதி மொழி?

அன்னம் மன்னர் பாவோ டாயால் 'டிஸ்மிஸ்' செய்யப்பட் டுள்ள பிரதமர் நகோ தின் தியெமை வியட்நாம் குடியரசின் தலைவராக நியமித்து, மன்னரைப் பட்டத்திலிருந்து விலக்குவதற்குத் தாங்கள் உறுதி கொண்டிருப் பதாகத் தென்வியட்நாம் இராணு வத் தலைவர்கள், பிரதமரிடம் தெரிவித்துள்ளனராம்.

சென்னை மிருகக் காட்சிசாலை யின் 100-வது ஆண்டுவிழாவை அக். 31-ந் தேதியன்று ஆரம்பிப் பதென முடிவு செய்யப்பட்டிருக் கிறது. உலக நாடுகளிலிருந்தெல் லாம், இவ்விழாவை ஒட்டி, விநோதமான மிருகங்கள்—பறவை இனங்கள் காட்சிசாலைக்கு வந்துள் ளன.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ் செழியன், எம். ஏ., அவர்களால் அழகான் அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறு கிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.